தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 6 Special Issue: 02 December 2025
DOI: https://doi.org/10.63300/tm060225

# The background structure of the characters in the Natrinai poems from a narratological perspective

**S. Saranraj[1], Dr. A. Maria Sebastian[2]**
[1]Full-time PhD Research Scholar, School of Social Sciences and Languages, Vellore University of Technology, Vellore
Email: saranraj.s2020@vitstudent.ac.in
[2]Assistant Professor, Lecturer, School of Social Sciences and Languages, Vellore University of Technology, Vellore
Email: mariasebastin.a@vit.ac.in, ORCiD: http://orcid.org/0009-0001-7269-6217

**Abstract:**
In the Tamil research field, various studies have evolved and reached significant development. Among them, the theory of narratology is noteworthy. Narratology helps us understand the transformations that occur while narrating an event and the processes that bring about those transformations. Within this theory, the study of characters becomes an essential component. Characters form the core of a narrative and determine its events as well as its outcome. Furthermore, the "background", which is an important element of narratology, reveals the lives and emotions of these characters. In particular, both the subject and the theme play a crucial role in shaping this background. This research aims to analyse, from a narratological perspective, the background structure of the character - namely the hero (thalaivan), the heroine (thalaivi), and the friend (thozhi)-who appear in the Natrinai poems.

**Keywords:** *Natrinai, Narratology, Backround, Character, Statement.*

**References:**

1. Natrinai Nanuru, Society Publication, Saiva Siddhanta Book Publishing Society Lit, Chennai, 2017.
2. K. V. Balasubramanian (U.A.) Natrinai, New Century Book House, Chennai, 2004.
3. Modern Poetics: Editorial, K. Panchangam, Kavya Publishing House, Chennai, 2003.
4. Principles of Literature and Criticism, K. Panchangam, Annam Publishing House, Thanjavur, 2011.
5. Principles and Criticism, K. Palanivelu, Annam Publishing House, Thanjavur, 2020

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**
This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# எடுத்துரைப்பியல் நோக்கில் நற்றிணை பாடல்களிலுள்ள கதை மாந்தர்களின் பின்புல அமைப்பு

[1]**ச.சரண்ராஜ்,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வேலூர் தொழிநுட்பப் பல்கலைக்கழகம், வேலூர்

[2]**முனைவர் அ. மரிய செபஸ்தியான்,** உதவிப் பேராசிரியர், நெறியாளர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வேலூர் தொழிநுட்பப் பல்கலைக்கழகம், வேலூர்

**சுருக்கம் (Abstract)**

தமிழ் ஆய்வுலகில் பல்வேறு ஆய்வுகள், பரிணாம வளர்ச்சி எட்டி உயர்ந்து வருகின்றன. அவற்றுள் எடுத்துரைப்பியல் கோட்பாடு குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நிகழ்ச்சியை மொழிப்படுத்தும் போது நடக்கிற மாற்றங்களையும், அந்த மாற்றங்களை நிகழ்த்துகிற செயல் போக்கினையும் உணர்ந்துக் கொள்ள எடுத்துரைப்பியல் கோட்பாடு பயன்படுகிறது. இக்கோட்பாட்டில் கதை மாந்தர்களைப் பற்றி ஆராய்வது இன்றியமையாத கூறாகும். கதை மாந்தர்கள் கதையின் மையமாக இருந்து நிகழ்வுகளையும் அதன் முடிவையும் தீர்மானிக்கிறார்கள். அதோடு எடுத்துரைப்பியல் கூறுகளுள் முக்கியமானதாக இடம்பெறும் "பின்புலம்" அவர்களின் வாழ்க்கையையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது. குறிப்பாக முதற்பொருள் மற்றும் கருப்பொருள் ஆகிய இரண்டுமே பின்புலத்தை வடிவமைப்பதில் முக்கிய இடம் பெறுகின்றன.

**திறல் சொற்கள்:** நற்றிணை, எடுத்துரைப்பியல், பின்புலம், கதைமாந்தர், கூற்று.

**முன்னுரை**

எடுத்துரைப்பில் இடம்பெறும் கதைமாந்தார்களின் பின்புல விவரிப்பு சங்க இலக்கிய பனுவல்களில் இடம் பெறுகின்றது. எடுத்துரைப்பியல் என்ற கோட்பாட்டின் வழியாக சங்க இலக்கியத்தின் மீது விசாலமான பார்வையை செலுத்த முடியும். அதோடு எடுத்துரைப்பியல் கூறுகளுள் ஒன்றான பின்புலத்தை விவரிப்பதன் மூலம் கதை மாந்தர்களின் வாழ்க்கையை அறிய இயலும். பனுவலுக்குள் ஊடாடுகின்ற மொழியை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து, பனுவலின் இயக்கத்தை, அது வெளிப்படுத்தும் நுட்பத்தை அறிய செய்வதில் எடுத்துரைப்பியல் முக்கிய பங்காற்றுகிறது என்கிறார் க. பஞ்சாங்கம். (நவீன கவிதையியல்: எடுத்துரைப்பியல்) அவ்வகையில் இவ்வாய்வானது, நற்றிணை பாடல்களில் இடம்பெறும் கதை மாந்தர்களான தலைவன், தலைவி, தோழி ஆகியவர்களின் பின்புல அமைப்பை எடுத்துரைப்பு நோக்கில் ஆய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

**பின்புல அமைப்பு**

பின்புல அமைப்பானது எடுத்துரைப்பியல் கூறுகளுள் மிக முக்கியமான ஒன்றாகும். கூற்று நிலையில் அமைந்த பின்புலத்தை விவரிப்பதன் மூலம் கதை மாந்தர்களின் உணர்வுகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும். பல நிகழ்வுகள் பல்வேறு சூழல்களின் காரணமாக நிகழ்ந்திருக்கலாம். அதன் பின்புலத்தை வைத்து பார்க்கும் போது தான் கதை மாந்தர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

**கதை மாந்தர்கள்**

எடுத்துரைப்பில் கதைமாந்தர்கள் இன்றியமையாத இடம் பெறுகின்றனர். இலக்கியமெனும் மொழியாக்கப் புனைவுலகம் உருவாக்கியிருக்கும் கதைமாந்தர்கள், ஒவ்வொரு பண்பாட்டிலும் மிக நுட்பமான ஒரு தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். கதை செயல்படுகின்ற செயல்பாட்டின் விளைவாகக் 'கதை மாந்தர்கள்' உருவாகி விடுகின்றனர் என்றும், நிகழ்ச்சிகளிலிருந்து கதைமாந்தர்கள் ஒரு விதமான சுதந்திரமான நிலைப்பாட்டினை மேற்கொள்கின்றனர் எனவும் நாம் அறியலாம். சங்க இலக்கிய பாடல்கள் தனி நிகழ்ச்சிகளை, காட்சிகளை சுட்டுவனாக அமைந்துள்ளன.

**கதை மாந்தர்களின் பின்புலம்**

எடுத்துரைப்பியலில் கதை மாந்தர்களின் பண்புகளை அடையாளப்படுத்துவதும், பின்புலமாக வைத்துக் கூறுவதும் இன்றியமையாததாகும். படைப்பாளர் எடுத்துக் கூறும் விதத்திலேயே நாம் கதை மாந்தரின் பண்புகளை அடையாளம் காண முடியும்.

**தலைவனின் மனநிலையும் பின்புல அமைப்பும்**

தலைவனின் பின்புல அமைப்பு பல பாடல்களில் தெளிவாக கூறப்பட்டுள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

**"குருதி ஒண் பூ உரு கெழக் கட்டி**
**பெரு வரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்**
**அருவி இன் இயத்து ஆடும் நாடன்"**

(நற்றிணை : 34: 3-5)

சூரர மகளிர்கள், கடவுள் தன்மை பொருந்திய மலையிலுள்ள சுனையில் மலர்ந்த குவளை மலரைப் பறித்துக் குருதி போன்ற காந்தள் மலருடன் சேர்த்துக் கட்டி அதனைப் புனைந்து ஆடும் ஊரைச் சார்ந்தவன் தலைவன் என்று கூறுமிடத்தே, குவளை மலரைச் செந்நிற காந்தளோடு சேர்த்து மாலை கட்டுவது என்பது தலைவன் தலைவியுடன் கூடி இன்புறுதலை அறிய பின்னணியாக அமைந்துள்ளது. இதன் மூலம் தலைமகன் தலைவியை விட்டு பிரியாமல் இல்லறம் நடத்துபவன் என்பதை அறிய முடிகிறது. மேலும்,

**"கிழங்கு கீழ் வீழ்ந்து தேன் மேல் தூங்கி**
**சிற்சில வித்திப் பற்பல விளைந்து**
**தினைகிளி கடியும் பெருங்கல் நாடன்"**

(நற்றிணை 328:1-3)

எனும் இவ்வரிகளில் கிழங்குகள் மண்ணின் கீழே இறங்கின; தேனடைகள் மரக்கிளையில் தொடுக்கப் பெற்றன. சில விதைகள் விதைத்த அளவில் திணைக்கதிர்கள் பலவாக விளைந்தன. அத்திணைக் கதிர்களை கிளிகள் கொண்டு போகாதவாறு அவற்றை காக்கின்ற மலைநாடன் தலைவன் என கூறப்படுகிறது. இந்த பின்னணியின் மூலம் கிழங்கும், தேனும், தினையும் மிகுந்து தோன்றும் செல்வ சிறப்பு மிக்கது தலைவனின் நாடு எனும் இயற்கை வளம் பேசப்படுகிறது. தலைவனின் நல்லியல்புகளை விவரிப்பதற்காக, அவன் வாழும் சுற்றுச்சூழல், அவனது தோற்றங்கள், அவன் மேற்கொள்ளும் கடமைகளை விவரித்து, அவன் ஒரு சிறந்த வாழ்க்கைத் துணை என கூறப்படுகிறது. மண்ணில் வேரூன்றிய கிழங்கு போலத் தலைவியின் மேல் கொண்ட தலைவனது காதல் மனதில் ஆழமாக பதிந்துள்ளது.

பாசறையில் தனித்திருக்கும் தலைவன் தலைவியுடன் கூடி மகிழ முடியாத நிலையில் போர்வினை வயிற் பிரிந்ததை,

**"குன்றக் குறவனோடு குறுநொடி பயிற்றும்**
**துணை நன்கு உடையள் மடந்தை"**

(நற்றிணை 341:5-6)

எனும் பாடல் விளக்குகிறது. பாசறையில் தங்கியிருக்கும் தலைவன் கண்ணெதிரே ஓர் குன்றின்கண் குறமகள் ஒருத்தி, அவள் காதலனுடன் மகிழ்ந்திருப்பது கண்டு தன் தனிமைக்கு வருந்துகிறான். இந்தப் பின்னணி தலைவனுக்குத் தலைவியின் மேல் கொண்ட காதலை மேலும் கூட்டுவதற்குக் காரணமாக உள்ளது. இங்கு காதலர் மகிழ்ந்திருக்க நாம் பகைவரோடு பாசறையில் தனிமையில் இருக்கின்றோம் என்பதனை தலைவன் உணர்கிறான். அதாவது, தலைவியை பிரிந்து இருக்கும் நேரத்தில் தனிமை தலைவனை பலவிதங்களில் தூயரத்தில் ஆழ்த்தும் எனப் கூறப்படுகிறது.

மேற்கண்ட பாடல்களில், தலைவனின் பின்புலமானது தலைவன் வாழும் இடம், இயற்கையோடு இணைந்த வாழ்வு, மனநிலை ஆகியவைகளை கொண்டு அமைகிறது.

**தலைவியின் மனநிலையும் பின்புல அமைப்பும்**

**"குறக் குறுமாக்கள் தாளம் கொட்டும் அக்**
**குன்றகத்ததுவே, குழுமிளைச் சீறூர்;**
**சீறுரோளே, நாறு மயிர்க் கொடிச்சி;**
(நற்றிணை 95:6-8)

இப்பாடலில் நறுமணம் கமழும் கூந்தலையுடைய கொடிச்சி வாழும் ஊரானது, குறவர் குடியின் சிறுவர்கள் பெரிய பாறையின் கண் உள்ள மூங்கிலின்மேல் விசைத்தெழிந்து ஏறி நின்று தாளம் கொட்டுவர் என கூறப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியானது தலைவியை யாரும் சென்று காணுதல் என்பது இயலாதபடி கடுமையான குன்றுகளை உடையதாக அமைந்தது கொடிச்சியின் சீறூர். இவ்வூரில் வாழும் தலைவி எவராலும் அசைக்க முடியாத கற்புடையவள் என உணர்த்துகிறது. இதன்மூலம் தலைமகன் பாங்கனுக்கு, தலைவி வாழுமிடத்தின் தன்மை கூறப்படுகிறது.

**"நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்**
**என்றும் என்றோள் பிரிபறியலரே"**
(நற்றிணை 1:1-2)

இப்பாடலில் தலைவன் தலைவியை விட்டு பிரியக் கருதியதை அறிந்த தோழி தலைவியிடம் அதனை தெரிவிக்கிறாள். ஆனால் தலைவி அதனை ஏற்க மறுத்து தலைவனது அன்பையும் மனப்போக்கையும் நன்கு அறிந்தவளாய், தலைவன் அவ்வாறு செய்தற்கரியன் எனக் கூறுகிறாள். நீரின்றி அமையாத இவ்வுலகம் போல் தலைவன் என்னை விட்டு ஒருபோதும் பிரிய மாட்டான் என மன உறுதியுடன் கூறுகிறாள். இதன் மூலம், தலைவன் தான் சொல்லிய சொல்லை காப்பாற்றுவான் என தலைவன் மீது தலைவி வைத்துள்ள நம்பிக்கையை கூறுமிடத்து பின்புலமாகிறது.

மேற்கண்ட பாடல்களில் தலைவியின் பின்புல அமைப்பானது, தலைவி வாழும் கடுமையான காவல், நீரின்றி அமையாத இவ்வுலகம் போல் தலைவன் மேல் தலைவிக்குள்ள குணநலன் ஆகியவை கையாளப்பட்டுள்ளது.

**தலைவன் தலைவி காதலும் - காதல் வெளிப்பாட்டு பின்புலமும்**

நற்றிணையின் பல பாடல்களில் தலைவனுக்கும், தலைவிக்கும் இடையேயுள்ள காதல் பின்புல அமைப்பாக உள்ளது.

**"நிலவரை நிவந்த பலஉறு திருமணி**
**ஒளிதிகழ் விளக்கத்து ஈன்ற மடப்பிடி**
**களிறுபுறங் காப்பக் கன்றொடு வசதியும்"**
(நற்றிணை 399:5-7)

இவ்வரியில் பன்றிகள் நிலத்தைப் பறிக்கும் பொழுது அழகிய மணிகள் நிலத்திலிருந்து வெளியே வந்து ஒளி வீசி நிற்கிறது. இத்தகைய ஒளியில் இளைய பெண் யானை கன்றை ஈனுகின்றது. அந்த பெண் யானையின் பக்கத்தில் ஆண் யானை காவல் காத்து நிற்கின்றது. இந்தப் பின்னணியானது, தலைவன் தலைவியை மணந்து, இல்லறம் நிகழ்த்துகையில், அவன் இல்லறத்தில் புதல்வரை ஈன்ற தலைவி, தன் காதலன் தன்னைப் பாதுகாக்குமாறு மக்களுடன் மகிழ்ந்திருப்பாள் என்பதை குறிப்பால் உணர்த்துகிறது.

**"பழங்கண் மாமையும் உடைய; தழங்கு குரல்**
**மயிர்க்கண் முரசின் ஒருமுன்**
**உயிர்க்குறி எதிர்ப்பை பெறலருங் குரைத்தே".**
(நற்றிணை 93:10-12)

இப்பாடலில், தலைவனின் நாடு மிகவும் வளமை மிக்கதாக இருக்கிறது. தலைவனின் நாட்டிலுள்ள மரங்களில் பெரிய பலாப்பழங்கள் தொங்குகின்றது. மலையில் உள்ள அருவி மாலை போல் விழுகின்றன. கொல்லைகளில் பலவகையான கூலங்கள் விளைந்து காணப்படுகின்றன. இப்படிப்பட்ட வளமையான நாட்டினையுடைய தலைவன் தலைவியை சேருவதற்கு எவ்வித காரணமும் தடையாக இல்லை. தலைவன் செழிப்பாக இருப்பதால் விரைந்து முரசொலியுடன் வந்து தலைவியின் பசலை நோயை நீக்கி, அவளை மணந்து கொள்ள வேண்டும் என்று கூறுமிடத்தே பின்புலனாகிறது.

**தோழியின் மனநிலையும் பின்புல அமைப்பும்**

தலைவன் தலைவி காதலில் தோழி மிக முக்கிய இடம் பெறுகிறாள். தோழியின் எண்ணம் முழுவதும் தலைவியின் நலன் சார்ந்தே இருக்கும். உதாரணமாக,

**“அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்**
**பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த**
**நன்னெடுங் கூந்தல் நரையயொடு முடிப்பினும்**
**நீத்த லோம்புமதி பூக்கே ழூர!”**

(நற்றிணை 10:1-4)

எனும் பாடலில் தோழி, தலைவியைத் தலைவனுடன் உடன்போக்கு கொண்டு செல்கிறாள். அப்பொழுது தலைவனிடம் தோழி, இளமையாக இருக்கும் இவ்வேளையில் தலைவியை நீ விரும்புகிறாய், அவள் நலம் பேணுகிறாய். இனி அவளுக்கு உன்னை விட்டால் வேறு துணை இல்லை. எனவே இப்பொழுது நீ காட்டும் இதே அன்பை நரைக் கூடிக் கிழப்பருவம் எய்தி உடல் தளர்வுற்ற வேளையிலும் காட்ட வேண்டும் எனக் கூறுகிறாள். இதன் மூலம் கதை மாந்தரான தோழியின் எண்ணம், சொல், செயல் என அனைத்தும் தலைவியின் நலம் பேணுவதாகவே அமைந்துள்ளது. தலைவியின்பால் தோழிக்குள்ள இரக்கம், அன்பு, பாசம் ஆகியவைகளைக் கொண்டு தலைவி - தோழி நட்பு அறியப்படுகிறது. தோழி தலைவி மீது கொண்டுள்ள நட்பு, தியாகம், ஆகியவைகள் மூலம் தோழியின் பின்புலம் தெளிவாகிறது.

**முடிவுரை**

எடுத்துரைப்பியல் என்ற கோட்பாட்டின் வழியாக இலக்கியத்தின் மீது விசாலமான பார்வையை செலுத்த முடியும். மேலும் பனுவலுக்குள் காணப்படும் கிடக்கையை எடுத்துரைப்பதாக அமையும் எடுத்துரைப்பியல் மூலம் நற்றிணை பனுவலிலுள்ள தலைவன், தலைவி, தோழி ஆகிய கதைமாந்தர்களின் பின்புல அமைப்பை தெளிவாக காண முடிந்தது. தலைவனின் ஊர் சிறப்பு, இயற்கை வளம், பிரிவு ஆகியவற்றின் மூலம் தலைவனின் மனநிலை மற்றும் பின்புல அமைப்பையும், தலைவியை யாரும் காணமுடியாத அளவுக்கு கடுமையான காவல், தலைவன் மேல் தலைவிக்குள்ள மனவுறுதி, ஆண் யானையின் காவல் ஆகியவை மூலம் தலைவியின் மனநிலை மற்றும் பின்புல அமைப்பையும், தோழியின் குணநலன் மூலம் தோழியின் பின்புல அமைப்பையும் நம்மால் அறிய முடிகிறது.

**சான்றாதாரங்கள்**

1. நற்றிணை நானூறு, கழக வெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை, 2017.
2. கு. வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ) நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
3. நவீன கவிதையியல்:எடுத்துரைப்பியல், க. பஞ்சாங்கம், காவ்யா பதிப்பகம், சென்னை, 2003.
4. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், க. பஞ்சாங்கம், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2011.
5. கோட்பாடும் திறனாய்வும், கே. பழனிவேலு, அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2020

Tamilmanam